தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மாநகரச் சிறுவழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு மாநகரச் சிறுவழக்கு, நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(6) வரவு-செலவுத் திட்டம், 1979–80—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண்: 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: